# THIRUMARAI AASAAN


S. Rajanayagam

Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385


Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 31 October - 2018 Issue - 10


ஆசிரியர் உரை

## என்ன செய்வதென்று தெரியாத போது...

**ஆ**ஹா! இப்படி ஒரு தலைப்பைத் தான் வெகு நாட்களாகத் தேடிக் கொண்டிருந்தோம் என்று நீங்கள் நினைப்பது புரிகிறது. எப்படியெனில், ஏராளமான மேடுகளையும், பள்ளங்களையும் உள்ளடக்கிய இப்பூலோக வாழ்க்கைப் பாதையில் எதிர்பாராமல் எதிர்கொள்ள நேரும் பிரச்சனை களைச் சமாளிக்க வழி தெரியாமல் கையைப் பிசைந்து, விழி பிதுங்கி நிற்பது மானிடப் பிறவிகளாகிய நம் எல்லோருக்கும் வாடிக்கையான ஒன்றா கவே உள்ளது. இல்லையில்லை இவர்கள் இதற்கு விதிவிலக்கு என்று நாம் யாரையும் தள்ளிவிட முடியாது. ஏழை, பணக்காரன்; கோழை, வீரன்; பாமரன், படித்தவன்; அறிவிலி,அறிவாளி; வெட்டிக்காரன், கெட்டிக்காரன்; அற்பன், அதிகாரமிக்கவன்; செல்லாக்காசு, செல்வாக்குள்ளவன் என்று எவ்வித பேதமுமின்றி எல்லோரும் இதில் அடக்கமே. ஆம், எல்லோருமே தங்கள் வாழ்வின் ஏதாவதொரு கட்டத்தில், எக்கச்சக்கமான சூழ்நிலையில் இதற்கு என்ன செய்வது, அதை எப்படிச் சமாளிப்பது, அடுத்து இதற்கு என்ன வழி என்ற கேள்விகளோடு நேரங்களையும், நாட்களையும் எதிர்கொள்ளுகிறவர்களாகவே இருக்கிறோம்.

சரி, இப்படி என்ன செய்வதென்று தெரியாதபோது என்ன செய்ய வேண்டுமென்று கற்றுக்கொடுப்பதில் நான் கைதேர்ந்தவன் என்பதால் இத் தலைப்பை நான் தெரிந்துகொள்ளவில்லை. தடுமாறும் சூழ்நிலைகளைக் கையாளத் தெரியாத கையாலாகாதவர்களில் நானும் ஒருவன் என்று

ஒத்துக்கொள்வதில் எனக்கு எவ்விதத் தயக்கமும் இல்லை. ஆயினும், என் தேவனால் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் பரிசுத்த எழுத்துக்களில் **என்ன செய்யவேண்டுமென்று தெரியாதபோது என்ன செய்ய வேண்டும் என்பதற்கான விடை இருக்கிறபடியால்** நம் எல்லோருக்கும் பயன்படும்படியாய் இத்தலைப்பைத் தெரிந்திருக்கிறேன். அவ்வளவே!

இத்தலைப்புக்கான ஆதார வசனம் 2 நாளாகமம் 20 : 12 ல் உள்ளது. **எங்கள் தேவனே அவர்களை நீர் நியாயந்தீர்க்கமாட்டீரோ? எங்களுக்கு விரோதமாக வந்த இந்த ஏராளமான கூட்டத்திற்கு முன்பாக நிற்க எங்களுக் குப் பெலனில்லை: நாங்கள் செய்யவேண்டியது இன்னதென்று எங்களுக்குத் தெரியவில்லை. ஆகையால், எங்கள் கண்கள் உம்மையே நோக்கிக் கொண்டிருக்கிறது என்றுள்ளது**. இந்த வார்த்தைகளைப் பேசினவர் தெற்குப் பகுதி யாகிய யூதாவை ஆண்ட யோசபாத் ராஜா. பக்தியாய் வாழ்ந்த ராஜாக்களில் இவனுக்குச் சிறப்பிடம் உண்டு. இப்படி பக்தியாய் வாழ்ந்த யோசபாத் ராஜா போன்றவர்களே தன் வாழ்க்கைப் பாதையின் ஒரு கட்டத்தில் என்ன செய்வ தென்று தெரியாமல் திகைத்து நின்றிருக்கிருக்கும்போது, நானும் நீங்களும் இச்சூழ் நிலைக்கு விதிவிலக்காக எப்படி இருக்க முடியும்?

பக்தியாகவும், சிறப்பாகவும் வாழ்ந்த இந்த யோசபாத் ராஜா எப்பொழுது இப்படியொரு பலவீனப்பட்ட சூழலை எதிர்கொண்டான் என்பதைத் தெரிந்து கொள்வதற்கு நமது வழக்கத்தின்படி இதற்கான பின்னணி குறித்துக் கொஞ்சம் பார்த்து விடுவோமா?

தன் அந்திய காலத்தில் பக்தியிலும், புத்தியிலும் சீரழிந்து போன ஞானி சாலமோன் ராஜாவுக்குப்பின் ஒன்றுபட்டிருந்த இஸ்ரவேல் தேசம் வடக்கு, தெற்கு என்று பிரிந்து போனது. ரெகொபெயாம் தொடங்கி சிதேக்கியா வரை ஒரு 20 ராஜாக்கள் யூதாவை ஆண்டார்கள். இவர்களில் நான்காவது ராஜாதான் நம்ம யோசபாத். தன் தகப்பனாகிய ஆசாவுக்கு அடுத்து ராஜாவாகி அரசாட்சியோடு அருளாட்சியையும் இணைத்து நடத்தி தேவதய வினால் தேசத்தை உச்சத்திற்குக் கொண்டு சென்றான்( II நாளா 18:1). யோசபாத் கர்த்தருடைய கற்பனைகளின்படி நடந்து கர்த்தருடைய வழி களில் தன் மனதை உற்சாகமடையச் செய்ததோடு நிற்காமல் தேசத்தி லுள்ள பட்டணங்கள்தோறும் கர்த்தருடைய புத்தகம் பிரசங்கிக்கப்பட வேண்டுமென்று கட்டளையுமிட்டான் (II நாளா 17:4-9).

யானைக்கும் அடி சறுக்கும் என்பது போல இஸ்ரவேலின் துன்மார்க்க ராஜாவாகிய ஆகாபோடே சம்பந்தங்கலந்து அதற்கான கடும் விலையைக்

கொடுக்க வேண்டியதாயிருந்தாலும் கூட, **அவன் தேவனுக்காகச் செய்த நன்மையான காரியங்களினிமித்தம்** ( II நாளா 19:2-3 ) **கர்த்தர் இவனுக்கு அநுசாரியாயிருந்து காப்பாற்றி** (18:31) எருசலேமிலுள்ள தன் வீட்டிற்குச் சமா தானத்தோடே வரும்படி செய்தார் (19:1). தன்னுடைய ராஜ்யபாரத்தின் ஆரம் பத்தில் தேசத்தைத் தேவனுடைய வார்த்தைகளால் நிரப்ப பிரபுக்களையும், லேவியரையும், ஆசாரியரையும் ( II நாளா 17:7-9 ) பயன்படுத்தின யோசபாத் ராஜா, கர்த்தர் தனக்கு அளித்த உயிர் பிச்சைக்கு நன்றியாக சிம்மாசனத்தை விட்டிறங்கி தானே தேசமெங்கும் பிரயாணம் போய், அருளுரையாற்றி அவர்களைத் தங்கள் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தரிடத்திற்குத் திரும்பப் பண்ணினான் (II நாளா 19:4 ) போதுமா இவன் எப்படிப் பட்ட ராஜா என்பதற்கு! இப்படியொரு ராஜாவை சீண்டிப் பார்க்காமல் தொடர்ந்து மவுனம் காக்க சாத்தனாலும், அவன் கூட்டத்தாலும் காலந்தள்ள முடியுமா? மோதி வீழ்த்த முடியாது என்று திட்டமாகத் தெரிந்தாலும் கூட, வீண் முயற் சியில் இறங்காமல் பிசாசு இருப்பதில்லை, ஆதி முதல் அப்படி இருந்ததுமில்லை.

ஆம், ஒரு சமயம் மோவாப் புத்திரரும், அம்மோன் புத்திரரும் அவர்களோட அம்மோனியருக்கு அப்புறத்திலுள்ள மனுஷருங்கூட யோச பாத்திற்கு விரோதமாய் ஏராளமான ஜனங்கள் கடலுக்கு அக்கரையி லிருந்து வருகிறார்கள்; இதோ, அவர்கள் எங்கேதியாகிய ஆசாசோன் தாமாரில் இருக்கிறார்கள் என்று அறிவித்தார்கள் ( 20 : 1 - 2 ). இங்கே, பயந்து போன யோசபாத் யூதாவெங்கும் உபவாசத்தைக் கூறினபடியால், கர்த்தரிடத்தில் சகாயந்தேடும்படி ஜனங்கள் தேசத்தின் சகல பட்டணங் களிலிருந்த ஒட்டுமொத்த யூதா கோத்திரமும் திரண்டு வந்து ( வ.13 ) ஆலயத்தில் கூடினார்கள். அங்கே சபையிலே நின்று பரலோகத்தின் தேவ னை நோக்கி, அர்த்தமுள்ள ஒரு மன்றாட்டை யோசபாத் ஏறெடுத்தான் (20:6-12). இந்த மன்றாட்டின் ஊடேதான் **நாங்கள் செய்யவேண்டியது இன்ன தென்று எங்களுக்குத் தெரியவில்லை** என்று கூறினான். அப்பொழுது கர்த்தருடைய ஆவி சகரி யாவின் புத்திரன் யகாசியேல் மேல் வந்தபடியால் அவன் **சகல யூதா கோத் திரத்தாரே, எருசலேமின் குடிகளே, ராஜாவாகிய யோசபாத்தே கேளுங்கள்; நீங்கள் அந்த ஏராளமான கூட்டத்திற்குப் பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள் என்று கர்த்தர் உங்களுக்குச் சொல்லுகிறார்; இந்த யுத்தம் உங்களுடையதல்ல, தேவனுடையது என்றான்** (II நாளா 20:15).

பிறகு அவர்கள் கர்த்தருடைய வழிகாட்டுதலின்படியாக நடந்து, தங்கள் பயத்திற்குப் பாடை கட்டி, யுத்தத்திற்குத் துணிந்து சென்றார்கள் (20:17-21). அங்கே போர்க்கள தர்மத்திற்குச் சற்றும் சம்பந்தமில்லாத

ஒன்று நடந்துள்ளதை நாம் கவனிக்க வேண்டும். ஆம், ஆயுதமணிந்தவர் களுக்கு முன்பாகப் **பாடகர்கள் நிறுத்தப்பட்டார்கள்.** அவர்கள் **பாடித் துதி செய்யத் துவங்கின போது எதிரிகள் தங்களுக்குள்ளாக அடித்து, வெட்டுண்டு விழுந்தார்கள்** (வ.22-24). யோசபாத்திற்கும், யூதாவுக்கும் எதிராகக் கூட்டுச் சேர்ந்து ஏராளமாய் வந்தவர்களில் ஒருவர் கூடத் தப்பவில்லை. இத்தனைக்கும் **யூதாவின் மனிதர் போரிடத் தங்கள் ஆயுதத்தைத் தொடக்கூட இல்லை.** கர்த்தர் யாரைக் கொண்டு எப்படி வெற்றி கொடுக்கிறார் என்று பாருங்கள்! **நம்முடைய பிரச்சனை கர்த்தருடைய பிரச்சனையாக மாறும்போது அது எப்படிப்பட்டதாக இருந்தாலும் பஞ்சாய்ப் பறந்து போய்விடும்** என்பதற்கு இதைவிடச் சான்று வேறென்ன வேண்டும்? யோசபாத்தும் அவனுடைய ஜனங்களும் எதிரிகளின் ஏராளமான ஆடை, ஆபரணங்களைக் கொள்ளையிடு மளவுக்கு அவைகள் அவ்வளவு அதிகமாய் இருந்தது. கலக்கத்தோடு சென்ற யோசபாத்தும், யூதாவின் மனுஷரும் மகிழ்ச்சியோடே எருசலே முக்குத் திரும்பினார்கள்.

இப்பொழுது, யோசபாத் ராஜாவோடு சம்பந்தப்பட்ட இச்சம்பவம் நமக்குக் கற்றுக்கொடுக்கும் பாடங்கள் என்னவென்று பார்ப்போம்.

### I யோசபாத் தேவ ஒத்தாசைக்காக ஜெபித்தார் ( 5 - 12 )

என்ன செய்வதென்று தெரியாதபோது, என்ன செய்யவேண்டுமென்று யோசபாத் ராஜா நமக்குக் கற்றுக் கொடுக்கும் முதல் பாடம், ஆபத்தான சூழ்நிலைகளில் தேவனை நோக்கி ஜெபிக்க வேண்டுமென்பது.

யோசபாத் ராஜா தேவனுக்கு நன்றியாயும் உண்மையாயும் வாழ்ந்து வந்த நாட்களில், தன்னை எதிர்த்து வந்த ஏராளமான கூட்டத்தால் தனக்கு ஆபத்து வந்தபோது **தேவன் என்னைக் கைவிட்டு விட்டார், நான் அவருக்கு உண்மையாய் வாழ்ந்து என்ன பயன்** என்றெல்லாம் நம்மைப்போல் முறுமுறுத்து, கேள்விகளை தேவனுக்கு எதிராக எழுப்பாமல் யூதாவின் பெண்கள், குழந்தைகள் என்று சகல குடிகளோடும் சேர்ந்து தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்தி, அவருடைய வல்லமையில் நம்பிக்கை வைத்து, அவருடைய வாக்குத்தத்தங்களை எடுத்துச் சொல்லி. **அத்தோடு எங்களால் முடியாது என்று தங்கள் இயலாமையையும் வெளிப்படுத்தி ஜெபித்தான்.**

ஆபத்தான சமயங்களில் ஒத்தாசை வேண்டி தேவனிடத்தில் மன்றாடும்பொது நம்முடைய நீதி பற்றி அவருக்கு எடுத்துச் சொல்வது அவசியமில்லாத ஒன்று. ஏனெனில், தேவன் எல்லாம் அறிந்தவராக இருக்கிறார். நாம் ஒன்றை எடுத்துச் சொல்லி அதனடிப்படையில் அவர்

விளங்கிக் கொள்ளவேண்டிய சூழ்நிலையில் அவர் ஒருபோதும் இருப்ப தில்லை. யோசபாத் இதற்கு சிறந்த ஓர் எடுத்துக்காட்டு. உத்தமமான வாழ்வுக்குத் தன்னை ஒப்புக்கொடுத் திருந்தும்கூட ( 19.11 ) தன்னுடைய உத்தமம் மற்றும் நீதி பற்றி வாயே திறக்கவில்லை அவன். ஆனால், நாம் என்ன செய்கிறோம்? தேவநீதி மற்றும் உத்தமத்தின் வாடையே நம்மீது படாத நிலையிலும் கூட கூரை மீது ஏறி நின்று நம்முடைய நீதிபற்றி கூப்பாடு போட ஆரம்பித்து விடுகிறோம். நாம் யோசபாத்திடமிருந்து பாடம் கற்றே ஆக வேண்டும்.

இன்னும் யோசபாத் ராஜா அந்த ஜெபத்தை எப்படி முடிக்கிறார் என்பதும் கவனிக்கத்தக்க ஒன்றாகவே உள்ளது. நாங்கள் செய்ய வேண்டியது இன்னதென்று எங்களுக்குத் தெரியவில்லை. **ஆகையால், எங்கள் கண்கள் உம்மையே நோக்கிக்கொண்டிஜக்கிறது** (20:12) என்றான். எங்கள் கண்கள் **உம்மையும்** என்று ஜெபிக்கவில்லை, " உம்மையே " என்றுள்ளதை நாம் குறிப்பாகக் கவனிக்கவேண்டும். நம்முடைய ஜெபங்க ளெல்லாம் இப்படியா உள்ளது? நம்மால் ஆன சகல முயற்சிகளையும் சகல இனங்களிலிருந்தும் எடுத்துவிட்டுப் பிறகு " கர்த்தரிடத்திலும் " ஜெபித்துப் பார்கலாம் என்றல்லவா பெரும்பாலும் ஜெபிக்கிறவர்களாக உள்ளோம்! தவறு, தவறு, நிச்சயமாகத் தவறு.

" ஆபத்துக் காலங்களில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய் " ( சங்50:15 ) என்னும் ஆசாவின் வார்த்தைகள் யோசபாத்துக்குத் தெரிந்திருந்தது. ஆனால் நமக்கு? அது மாத்திரமல்ல " எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன் வானத்தையும், பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும் " (சங் 121:1.2) என்னும் வசனங்களின் பொருளும் யோசபாத்துக்குத் தெரிந்திருந்தது. ஆனால் நமக்கு?

அருமையானவர்களே! என்ன செய்வதென்று தெரியாத நிலையை நம்முடைய வாழ்க்கைப் பாதையின் ஏதாவது ஒரு கட்டத்தில் எதிர்கொண்டு தான் ஆக வேண்டும். அப்பொழுதெல்லாம் நாம் செய்ய வேண்டிய முதல் காரியம், " நம் சூழ்நிலைகளை, பிரச்சினைகளை அவரிடத்தில் எடுத்துச் சென்று அவரையே நோக்கிக் கொண்டிருக்கிறதாக இருக்க வேண்டும் " (II நாளா 20:12).

**II யோசபாத் தேவ ஒத்தாசைக்காகக் காத்திருந்தான்**

என்ன செய்வதென்று தெரியாதபோது என்ன செய்யவேண்டுமென்று

யோசபாத் ராஜா நமக்குக் கற்றுக்கொடுக்கும் இரண்டாம் பாடம், தேவனை நோக்கி ஜெபித்துவிட்டு தேவ ஒத்தாசைக்காக நாம் காத்திருக்கவேண்டு மென்பது.

தேவ தயவுக்காக நாம் காத்திருக்க வேண்டுமென்பது தேவனால் எதிர்பார்க்கப்படும் ஒன்றாகவே இருந்து வந்துள்ளது. சர்வ ஞானமுள்ள தேவன் நம்முடைய விருப்பத்தின்படி செயல்பட வேண்டுமென்று நாம் எதிர் பார்க்கக்கூடாது. காத்திருப்பது அதுவும் ஒன்றிற்காக நெடுநாளாய்க் காத்திருப்பது இருதயத்தை இளைக்கப் பண்ணும் (நீதி 13:12) உண்மை தான்! ஆயினும், தேவனை நெருக்கவும் அவருக்கு நெருக்கடி கொடுக் கவும் நமக்கு எந்த அதிகாரமும் இல்லை தானே! அப்புறம் என்ன? நம்ம யோசபாத் ராஜா ஓர் ஏடாகூடமான சூழ்நிலையிலும் தேவனிடத்தில் காத்திருந்தான் என்பதை நாம் கவனிக்க வேண்டும். II நாளா 20:13 இவ்விதமாகக் கூறுகிறது. யூதா கோத்திரத்தார் அனைவரும் அவர்கள் குழந்தைகளும், அவர்கள் பெண்ஜாதிகளும், அவர்கள் குமாரருங்கூட கர்த்தருக்கு முன்பாக நின்றார்கள் என்று. **நின்றார்கள்** என்பதின் பொருள் காத்திருந்தார்கள் என்பதே. ஆம், கர்த்தருடைய சமூகத்தில் காத்தி ருந்தார்கள் – அய்யோ அய்யோ என்று கூப்பாடு போடவில்லை.

தேவனுக்குப் பயந்து வாழ்ந்தவர்கள் எப்பொழுதும் கர்த்தருக்குக் காத்திருந்திருக்கிறார்கள். மிகுந்த ஆபத்தான சூழ்நிலையில் கூட அப்படிச் செய்திருக்கிறார்கள். இஸ்ரவேல் மக்களை எகிப்திலிருந்து விடுவித்து வழி நடத்தி வந்த போது, **பார்வோனின் இருதயம் கடினப்பட்டு இஸ்ரவெலைப் பின் தொடர்ந்து பிடித்துவர சகல குதிரைகளையும், இரதங்களையும், வீரர்களையும் அவர்களைப் பிடித்துவர அனுப்பினான்** (யாத் 14:8). இஸ்ரவேலர்கள் அவர்களைத் திரும்பிப் பார்த்து முறையிட்டார்கள் ( யாத் 14 :10-12). “ அப்பொழுது மோசே ஜனங்களை நோக்கி பயப்படாதிருங்கள் நீங்கள் **நின்று கொண்டு** இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காண மாட்டீர்கள் ” (யாத்14 :13) என்றான். இங்கே **நின்றுகொண்டு** என்பதின் பொருள் **காத்திருந்து** என்பதே. அங்கே என்ன நடந்தது என்பதை நான் சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஆம், துரத்திவந்தவர்கள், செங்கடலில் அழிந்து போனார்கள்.

அப்படியானால், அருமையானவர்களே! நம்முடைய வாழ்க்கையில் நாம் தேவ வழிநடத்துதலுக்காகவும், தேவ ஒத்தாசைக்காகவும் காத்திருக் கிறவர்களாக உள்ளோமா? தாவீதைக் கொண்டு பரிசுத்த ஆவியானவர் கூறுவதைப் பாருங்கள். “ **கர்த்தருக்குக் காத்திரு; அவர் உன் இருதயத்தை**

**ஸ்திரப்படுத்தவார்; திடமனதாயிருந்து கர்த்தருக்கே காத்திரு என்று** " (சங் 27:14) மேலும், " நீங்கள் அமர்ந்திருந்து, அதாவது காத்திருந்து , நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள் " (சங் 46:10) அந்தக் காத்திருக்கு தலைக் குறித்து ஏசாயா தீர்க்கனைக் கொண்டு ஆவியானவர் இன்னும் எவ் வளவு நேர்த்தியாகக் கூறுகிறார் பாருங்கள். " **கர்த்தருக்குக் காத்திருக் கிறவர்களோ புதுபெலன் அடைந்து கழுகுகளைப் போல செட்டைகளை அடித்து எழும்புவார்கள். அவர்கள் ஓடினாலும் இளைப்படையமாட்டார்கள். நடந்தாலும் சோர்ந்து போகார்கள்** " (ஏசாயா 40:31) என்று.

ஆகவே, நாம் நம் வாழ்க்கையில் என்ன செய்யவேண்டுமென்று தெரி யாத நிலையை எதிர்கொள்ளும் போது, என்ன செய்யவேண்டுமென்ப தற்கு, யோசபாத் ராஜா போல தேவனிடத்தில் ஜெபித்து, அவருடைய வழி நடத்துதலுக்காகக் காத்திருக்கக் கற்றுக் கொள்வோம்.

### III **யோசபாத் தேவனை நம்பி வெற்றி பெற்றான் (11 - 27)**

என்ன செய்யவேண்டுமென்று தெரியாதபோது, என்ன செய்ய வேண்டுமென்று யோசபாத் நமக்குக் கற்றுக்கொடுக்கும் இன்னுமொரு பாடம், தேவன் மீது நம்பிக்கை வைத்து காத்திருந்து செயல்பட்டால் வெற்றி நிச்சயம் என்பது.

மிகப்பெரிய ஆபத்து தன்மீதும் தன் ஜனங்கள் மீதும் வந்திருந்த போதும், கர்த்தருடைய வழிநடத்துதலுக்காகக் காத்திருந்த யோசபாத் கர்த்தர் மீதான தன் நம்பிக்கையை எந்த ஒரு கட்டத்திலும் இழக்கவில்லை. "இந்த யுத்தம் உங்களுடையதல்ல, தேவனுடையது" (வ.15) என்று கர்த்தருடைய ஆவி இறங்கின யகாசியேல் மூலமாகச் சொல்லப்பட்ட வார்த்தைகளை **அப்படியே முழுமனதோடு நம்பி தேவ சமூகத்தில்**, " தரைமட்டும் முகங் குனிந்து " (வ.18) தன் ஜனங்களிடத்தில் எவ்வளவு நம்பிக்கை யோடு பேசியிருக்கிறான் பாருங்கள்! அவர்கள் அதிகாலமே எழுந்திருந்து, தெக்கோவாவின் வனாந்திரத்திற்குப் போகப் புறப்பட்டார்கள். புறப்படு கையில் யோசபாத் நின்று: யூதாவே எருசலேமின் குடிகளே, கேளுங்கள்; **உங்கள் தேவனாகிய கர்த்தரை நம்புங்கள். அப்பொழுது நிலைப்படுவீர்கள்; அவருடைய தீர்க்கதரிசிகளை நம்புங்கள். அப்பொழுது சித்தி பெறுவீர்கள்** (20:20), அதாவது, வெற்றி பெறுவீர்கள் என்றான்.

அங்கே கர்த்தரும், கர்த்தருடைய தீர்க்கதரிசியும் சொன்ன வார்த்தைகளைத் தான் நம்பினதோடு, ஒட்டுமொத்தக் குடிகளையும் நம்பும்படி ஏவினான். " கர்த்தரைப் பற்றும் பயத்தோடிருப்பவர்களின்

நம்பிக்கை வீண்போகாது " (நீதி.23:17,18) என்னும் ஞானியின் வார்த்தைகள் யோசபாத் விசயத்தில் முழுமையாய் நிறைவேறியது. ஆம், யோசபாத்தையும், அவன் மனிதர்களையும் அழிக்கும்படியாகக் கூட்டுச்சேர்ந்து வந்தவர்கள், " **ஒருவருக்கு ஒருவர் விரோதமாக எழும்பி தங்களை அழித்துக் கொள்ளும்படியாக** " (வ.22) கர்த்தர் செய்தார். மிகுந்த பயத்தோடு எருசலேமை விட்டுப் புறப்பட்டவர்கள்(20.2), பெரும் மகிழ்ச்சியோடு எருசலேமுக்குத் திரும்பினார்கள். இவ்வசனத்தைக் கவனியுங்கள், " **பின்பு கர்த்தர் அவர்களை அவர்கள் சத்துருக்கள்பேரில் களிகூரச் செய்தபடியால் யூதா மனுஷர் யாவரும்**, **எருசலேமுக்குத் திரும்பினார்கள்** " (நாளா 20.27). " உங்கள் துக்கம் சந்தோ-ஷமாக மாறும் " (யோவான் 16.20) என்பதற்கு இதைவிடச் சிறந்த எடுத்துத்காட்டு என்ன வேண்டும்?

அன்பானவர்களே, தேவன் மீதான நம்பிக்கை என்பது முற்றிலும் வித்தியாசமானது. எல்லாம் நம் எதிர்பார்ப்பின்படியாகவும், சகலமும் நம் திட்டத்தின்படியாகவும் நடக்கும்போது அவரைக் கிட்டிச் சேர்வதும், அவரைத் துதிப்பதும், அவருக்கான காரியங்களில் ஈடுபடுவதும் சரியான நம்பிக்கை அல்ல. மாறாக, இனி அவ்வளவுதான், எல்லாம் முடிந்தது, இதற்கு மேல் ஒன்றும் முடியாது என்னும் ஒரு கைவிடபட்ட நிலையில் தேவனை நோக்கிக் கெஞ்சி, அவருக்காகக் காத்திருந்து காரியமாற்றுவதுதான் மெய்யான நம்பிக்கை. அப்படிப்பட்ட நம்பிக்கை வைப்பவர்களுக்குத் தான் அவர் எப்போதும் நல்லவராக இருக்கிறார். அப்படியானால் தேவன் மீதான நம்முடைய நம்பிக்கை எப்படியுள்ளது? எந்தளவில் உள்ளது? யாருடைய பிரச்சினையைக் கர்த்தர் தன்னுடையதாக எடுத்துக்கொள்கிறார் என்பதைக் கவனித்தீர்களா?.

இன்னும் நம்பிக்கை சம்பந்தமாக, யோசபாத் கூறுவதை நன்றாக கவனியுங்கள். " **கர்த்தரை நம்புங்கள்** ", "**அவருடைய தீர்க்கதரிகளை நம்புங்கள்** " என்றான். குறிப்பாக, கர்த்தர் யகாசியேலைக் கொண்டு சொன்ன வார்த்தைகளை நம்ப வேண்டுமென்று வலியுறுத்திக் கூறினான். கர்த்தருடைய வார்த்தைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயல்பட்டான். அது போலவே சிலுவைக்குப் பின்னால் வாழும் நமக்கு தேவன் புதிய ஏற்பாட்டின் மூலமாக கிறிஸ்துவின் உபதேசத்தைக் கொடுத்திருக்கிறார். ஆகவே, இப்பூமிக்குண்டான வாழ்விலும், மறுமைக்குண் டான வாழ்விலும் வெற்றிபெற கிறிஸ்துவின் உபதேசத்தை நாம் நம்ப வேண்டும். அதாவது, உபதேசத்தை ஏற்று நடக்க வேண்டும். எந்தச் சூழ்நிலையிலும் நாம் அப்படிச் செய்ய வேண்டும் ! அப்படிச் செய்ய நாம் தயாரா?

அருமையானவர்களே, யோசபாத் ராஜா மூலமாக தேவன் நமக்குத் தந்துள்ள பாடங்களைக் கற்றுக்கொண்டு, எல்லா ஆபத்துகளைத் தாண்டி வெற்றி வாழ்க்கை வாழத் தேவன் நமக்கு உதவி செய்வாராக! ஆமென்!!

# மனமாற்றத்தில் பரிசுத்த ஆவியானவர்

Bro. J.C. சோட்

மனமாற்றம் அல்லது மனந்திரும்புதல் என்பது ஒருவருடைய வாழ்க்கையில் ஏற்படும் மாற்றத்தைக் குறிக்கிறது என்பதில் சந்தேகமில்லை. வேதவாக்கியங்களின்படியாக, தேவனை ஒருவர் விசுவாசித்து, தனது பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என அறிக்கையிட்டு, தன் பாவங்கள் கழுவப்பட திருமுழுக்குப் பெற்றுக்கொள்ளும்போது இரட்சிப்பு கிடைக்கிறது. மனமாற்றங்களைப் பற்றிய விவரங்களை நாம் காண முடியும். அவை அனைத்தையும் நீங்கள் படித்துப் பார்த்தால், அந்த மக்கள் அனைவரும் கர்த்தருக்குக் கீழ்ப்படிவதில் ஒரே காரியத்தைச் செய்தார்கள் எனப்புரியும். ஆனால், இவை அனைத்திலும் பரிசுத்த ஆவியானவருடைய பங்கு என்ன?

என்னோடு யோவான் 3ம் அதிகாரத்திற்கு வாருங்கள், அதைப்படித்து, இயேசுவால் கற்பிக்கப்பட்ட புதிய பிறப்பு பற்றி நாம் கொஞ்சம் சிந்திப்போம். வசனம் கூறுகிறது, யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு என்னப்பட்ட பரிசேயன் ஒருவன் இருந்தான். அவன் இராக்காலத்திலே இயேசுவினிடத்தில் வந்து, ரபீ நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம். ஏனெனில், ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்டப் அற்புதங்களைச் செய்யமாட்டான் என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக, ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். அதற்கு நிக்கொதேமு: ஒரு மனிதன் முதிர்வயதாகியிருக்கையில் எப்படி பிறக்கக்கூடுமோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக : ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டாலும் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும். நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டுமென்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்பட வேண்டாம். காற்றானது தனக்கு இஷ்டமான இடத்தில் வீசுகிறது. அதின் சத்தத்தைக்க் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலுருந்து வருகிறதென்றும், இன்ன இடத்திற்குப் போகிறது என்றும், உனக்குத் தெரியாது. ஆவியினால் பிறந்தவன் எவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்றார். இயேசு அவனை

நோக்கி, நீ இஸ்ரவேலில் போதகனாயிருந்தும் இவைகளை அறியாமலிருக்கிறாயா? மெய்யாகவே மெய்யாகவே நான் உனக்கு சொல்லுகிறேன். நாங்கள் அறிந்திருக்கிறதைச் சொல்லி, நாங்கள் கண்டதைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறோம், நீங்களோ எங்கள் சாட்சியை ஏற்றுக்கொள்ளுகிறதில்லை. பூமிக்கடுத்த காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லையே, பரமகாரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்?பரலோகத்திலிருந்து இறங்கினவரும் பரலோகத்தில் இருக்கிற வருமான மனித குமாரனேயல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை' (யோவான் 3:1 -13 ) என்றார்.

இயேசுவுக்கும் நிக்கொதேமுவுக்கும் இடையில் நடைபெற்ற உடையாடலை தயவுசெய்து கவனித்துப் பாருங்கள். இங்கே ஒரு மனிதன் இருந்தான்; அவன் பரிசேயன், மிகுந்த மதப்பற்றுள்ளவன். ஆனால், இயேசுவை விசுவாசித்த மனிதன், யூதர்களுக்கு பயந்தும், மற்ற மக்கள் என்ன சொல்வார்களோ என்று கருதியும் இயேசுவை இரவில் வந்து சந்திக்கிறான். இரு வேறு சந்தர்ப்பங்களிலும் இவ்வாறு நடைபெற்ற காரியம் குறிப்பிடப்பட்டுள்ளது. இயேசுவுக்காக நிக்கொதேமு பரிந்து பேசுகிற வேளையிலும், மற்றொரு சமயம், இயேசுவை அடக்கம் செய்ய அவன் வெள்ளப் போளமும், கரியபோளமும் கொண்டுவர, இயேசுவைச் சுகந்த வர்ககங்களுடனே சீலைகளில் சுற்றிக்கட்டிய வேளையிலும் இவ்வாறு நடந்தது. ஆனால், நிக்கொதேமு இயேசுவின் பேரில் தனக்குள்ள விசுவாசத்தை அறிவிக்கும்விதமாக ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம். ஏனெனில், ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான் என்றான்.

வசனம் மேலும் தொடரும் போது, இயேசு அவனுக்குப் பதிலளித்து தேவனுடைய இராஜ்ஜியத்தில் ஒருவன் பிரவேசிக்க வேண்டுமானால் அவன் மறுபடியும் பிறக்க வேண்டுமென்று கூறினார். சபையாகிய இராஜ்ஜியம் அப்பொழுது நிறுவப்படாமலிருந்தது. ஆனால், விரைவில் அது வரவிருந்து. அந்த ராஜ்யம் அல்லது சபையில் ஒருவன் பிரவேசிக்க ஆவிக்குரிய ஒரு பிறப்பே அவனுக்குள்ள ஒரே வழி.

எதார்த்தமாக, சரீரப்பூர்வமான பிறப்பைப்பற்றி கிறிஸ்து கூறிக்கொண்டிருப்பதாக நிக்கொதேமு நினைத்தான், எனவே, தான், முதிர் வயதில் ஒருவன் மீண்டுமாக எப்படி பிறக்க இயலும் எனக்கேட்டான். பின்னர், தாம் எப்படிப்பட்ட பிறப்பைப்பற்றிக் கூறிக்கொண்டிருந்தார் என்பதை இயேசு அவனுக்கு விளக்குகிறார். சரீரத்தில் பிறப்பதைப் பற்றி அவர்

குறிப்பிடவில்லை; ஏனெனில், மாம்ச சரீரத்தால் சபை அல்லது ராஜ்யம் கட்டப்படுகிறதில்லை. ஒரு ஆவிக்குரிய பிறப்பை மனதில் வைத்து இயேசு அவ்வாறு கூறினார். இந்த ஆவிக்குரிய பிறப்பு, ஒரு சரீர, செயல் மூலமாக, அதாவது தண்ணீரில் பிறப்பதால் ஏற்படுகிறது. தண்ணீரைக் கொண்டு கீழ்படியச் சொல்லும் ஒரே ஒரு செயல் மட்டுமே வசனத்தில் காணப்படுகிறது. அது திருமுழுக்கு ஆகும். நிறைய தண்ணீர் இருந்த இடத்தில் யோவான் திருமுழுக்கு கொடுத்ததாக நமக்குச் சொல்லப்படுகிறது. (யோவான் 3:23) கிறிஸ்து தண்ணீரில் திருமுழுக்குப் பெற வேண்டுமென சவுலுக்கச் சொல்லப்பட்டது. (அப்.22:16) கிறிஸ்துவுக்குள்ளாக நாம் திரு முழுக்குப் பெறுவதாக பவுல் கூறினார். (ரோமர் 6:3) கிறிஸ்து வுக்குள் நாம் புதிய சிருஷ்டியாக இருக்கிறோம். (IIகொரி 5:17) இதுவே தண்ணீரில் பிறப்பது என்பதின் பொருளாகும்.

அடுத்ததாக, இயேசுவின் மனதில் உள்ள பிறப்பில் ஆவியும் சம்பந்தப்பட்டுள்ளது. அவர் கூறினார், ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டாலும் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் (யோவான் 3:5) நாம் பார்த்தபடி, தண்ணீரில் பிறப்பதென்பது திரு முழுக்கைப் பற்றி தெளிவாகக் குறிப்பிடுவதாகும். ஆனால், இந்த எல்லாக் காரியங்களிலும் ஆவியானவரின் பங்கு என்ன? உண்மையில், தண்ணீராலும் ஆவியாலும் பிறப்பது என்பது ஓர் ஒருங்கிணைந்த செயலாகும். ஒன்றை விட்டு விட்டு மற்றதை நீங்கள் செய்ய முடியாது. இங்கே ஆவியின் ஈடுபாட்டைப் பற்றி அறிய நாம் Iபேதுரு1:22-23 ஆகிய வசனங்களுக்குச் செல்வோம் அங்கே பேதுரு கிறிஸ்தவர்களிடம் பேசுவதை நாம் பார்க்கிறோம். ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்கு கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடிடியால், சுத்த இருதயத்தோடே ஒருவருக்கொருவர் ஊக்கமாய் அன்பு கூருங்கள்; அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்கள். எனவே, ஒருவர் மீண்டும் பிறப்பது என்றால் அழிவுள்ள வித்தினால் அல்ல, அதாவது, சரீர பிறப்பால் அல்ல, மாறாக, அழிவில்லாத வித்தாகிய தேவவசனத்தால் பிறக்கவேண்டும் எனப்பொருள். இப்போது, அந்த வசனத்தைக் கொடுத்தது யார்? சந்தேகமின்றி, ஆவியானவர் தான் கொடுத்தார். கிறிஸ்து சொன்னார். ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது. நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது (யோவான் 6:63) பின்னர் நற்செய்தியாகிய வசனம், அதாவது சத்தியம்,

உலகம் முழுவதும் எடுத்துச் சொல்லப்பட வேண்டும் என்று கிறிஸ்து கட்டளையிட்டார். (மாற்கு 16:15) எனவே, ஒருவன் அந்த வார்த்தையைக் கேட்டு விசுவாசியாக மாறும் போது (ரோமர் 10:17) வசனத்தின்படி நடந்து அதற்குக் கீழ்படியும் போது, கர்த்தர் அவனை இரட்சிக்கிறார். கிறிஸ்து கூறினார்: விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப் படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்மானிக்கப்படுவான் (மாற்கு 16:16) என்று.

தண்ணீராலும் ஆவியாலும் பிறப்பது என்றால் பின் என்ன அர்த்தம்? வசனத்தின் வழியாக ஒருவன் கிறிஸ்துவை விசுவாசிக்கவும், அவனுடைய பாவங்களுக்காக மனஸ்தாபப் படவும் கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என அறிக்கை செய்யவும், ஆவியானவர் அவனை வழிநடத்துகிறார் என்பதே அதின் எளிய பொருள் ஆகும். அடுத்து, இவை மூலமாக ஒருவன் தண்ணீராலும் ஆவியாலும் பிறக்கிறான். நற் செய்திக்குக் கீழ்ப்படிகிறான் அல்லது கிறிஸ்துவுக்குக் கீழ்ப் படிகிறான். அதாவது, வார்த்தை வழியாக ஆவியானவர் ஒருவனை அற்புதமாகஇரட்சிப்புக்கு வழி நடத்துகிறார் என அர்த்தமா? அல்லது வசனத்திற்கு அப்பால் வசனத்திற்கு வெளியே, ஒருவன் தண்ணீராலும் ஆவியாலும் பிறக்கிறானா? இல்லை என்பதே இதற்குப் பதில். இங்கே இரட்சிப்பு எந்த ஒரு அற்புத செயலாலும் நடைபெறு வதில்லை. ஆனால், தேவனுடைய ஆவிக்குரிய சட்டத்தின் படி ஒருவன் கர்த்தருடைய உபதேசத்திற்கக் கீழ்ப்படியும் போது அவன் இரட்சிக்கப்படுகிறான். அதற்கு மாறாக, அந்தச் சட்டத்திற்குக் கீழ்ப்படிய மறுப்பவர்கள் இரட்சிப்படைய இயலாது.

மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும் என வசனம் தொடர்ந்து கூறுகிறது. அதாவது, மாம்சத்தில் பிறப்பது சம்பந்தமான சட்டம் இருக்கிறது. ஆவியில் பிறப்பது சம்பந்தமாகவும் ஒரு சட்டம் உண்டு. அவை இரண்டுமே பிறப்பதைப் பற்றியதாக இருப்பினும் ஒன்று சரீரத்திற்குரியது; அடுத்தது ஆவிக்குரியது. இவை அனைத்தும் எவ்வாறு நடைபெறுகிறதென்று நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை யானாலும் அவை நடைபெற்றுக் கொண்டுதானிருக்கின்றன. நாம் காற்றைக் காண முடியாது, ஆனால், அதின் விளைவுகளைக் நாம் உணர முடியும். அதாவது, ஒருவன் முன் வந்து கர்த்தருக்குக் கீழ்ப்படியும் போது இரட்சிக்கப்படுகிறான். கர்த்தருடைய ராஜ்யத்திற்குள் சபைக்குள் - பிரவேசிக்கிறான். நற்கனிகளைக் கொடுக்கத் தொடங்கினான். இது தான் புதிய பிறப்பு, மனமாற்றத்தில் ஆவியானவரின் பங்கு இது தான்.

மாம்சப் பிறப்பைப் பொறுத்தவரை, அவை அனைத்தும் ஒரே மாதிரியான பிறப்புகள். ஆவிக்குரிய பிறப்பிற்கும் இது பொருந்தும். ஒருவனை ஒருவிதமாகவும், மற்றொருவனை வேறு விதமாகவும் தேவன் இரட்சிப்பதில்லை. எலலோரையும் ஒரே மாதிரியாகவே இரட்சிக்கிறார். அதாவது, வேதவசனங்களில் நிர்ணயிக்கப்பட்ட சட்டத்தின்படியாக இரட்சிக்கிறார்.

நீங்கள் மறுபடியும் பிறந்திருக்கீறீர்களா? இல்லையென்றால், நீங்கள் பிறப்பீர்கள் என நாங்கள் நம்புகிறோம். கர்த்தரை விசுவாசித்து, உங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, கிறிஸ்துவில் உங்கள் விசுவாசத்தை அறிக்கையிடுங்கள், பாவமன்னிப்புக்காக தண்ணீரில் அடக்கம் செய்யப்படுங்கள். அப்போது கர்த்தர் உங்களை இரட்சித்து, அவருடைய சபையிலே சேர்த்துக்கொள்வார் (அப். 2:38,47).

★

## கிறிஸ்துவின் போர்ச்சேவகர்களுக்கான அறிவுரைகள்

நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள். ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும் இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர் களாகும்படிக்கு தேவனுடைய சர்வாயுதவர்களையும் எடுத்துக்கொள்ளுங்கள். சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களையும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும்; சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களையும்; பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல் லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களையும் நில்லுங்கள். இரட்சணியாமன்னும் தலைச் சீராவையும், தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். (எபே 6 : 11–7).

சாத்தானுடனான யுத்தத்தில் பக்தி வாழ்வில் பயிற்சி எடுக்காமல், காலத்தைக் கழித்துவிட்டால், ஒருமுறைகூட நம்மால் வெற்றி பெறவே முடியாது! ஆகவே, முறையான பயிற்சியும், பொருத்தமான வஸ்திரமும் இருந்தால் தான் ஆவிக்குரிய வாழ்வில் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் அந்த எதிரியை நம்மால் எளிதாக வீழ்த்தி, ஆன்மீக வாழ்வில் வீரநடை போட்டு, கிறிஸ்துவோடு சேர்த்து பரலோகம் சென்று பரமவாழ்வை வாழமுடியும்.

பெண்கள் பகுதி

# கீழ்படியாமைக்கான காரணங்கள்

Sis. ரேச்சல் இராஜநாயகம்

**கி**றிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகள் அனைவருக்கும் கர்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஸ்தோத்திரங்கள், இம்மாதமும் நாம் அனைவரும் சேர்ந்து வேதத்திலிருந்து சில காரியங்களைக் கற்றுக் கொள்வோம்.

உலகையும், உலகத்திலுள்ளவைகளைனைத்தையும் உண்டாக்கின தேவன் மனிதனும், மனுஷியும் தமக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று எதிர்பார்த்தார். செய் என்றால் செய்வதும், வேண்டாம் என்றால் விட்டு விடுவதும், தேவனால் எதிர்பார்க்கப்படுகிற ஒன்றாகும். ஆனால், தேவனால் உண்டாக்கப்பட்ட மனுஷியும், இன்றளவும் வாழ்கின்ற நாமும் தேவன் வார்த்தைக்கு மதிப்பு கொடுக்காமல் அதை மீறி அதாவது கீழ்ப்படியாமல் பிறகு பாவம் செய்து விடுகிறோம்.

சரி தேவன் கீழ்ப்படிதலை முதலாவது நம்மிடம் எதிர்பார்க்கும் போது அதை மீறி கீழ்ப்படியாமல் போவதற்கு பல காரணங்கள் உள்ளன அவற்றில் சிலவற்றை இப்போது காண்போம்.

அநேகர் தேவனுடைய கட்டளையைப் பற்றிய அறியாமையினால் கீழ்படியாமல் போகிறார்கள். தேவன் தங்களிடம் எதைச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றாரோ அதைச் செய்யாமல் விட்டு விடுகிறார்கள் சட்டத்தைப் பற்றிய அறிவு இல்லாததால் ஒரு தவறை மன்னித்து விட முடியாது. நம் நாட்டில் உள்ள அனைவருக்கும் தேவனைப் பற்றிய அறிவு கொஞ்சமேனும் இருக்கும் யாரும் நியாயத்தீர்ப்பு வாசலில் போய் கெஞ்சி நிற்க முடியாது.

எதிர்த்து நிற்கிற குணத்தை உடையவன் கர்த்தருக்குக் கீழ்படிய முடியாது. கடவுளே இல்லை என்று சொல்லுகிறவனிலிருந்து சாதாரண தவறு செய்கிறவன் வரைக்கும் எதிர்த்து நிற்கிற

குணம் இருந்தால் அங்கே கீழ்ப்படிதல் இருக்காது. மனசாட்சியையும், உணர்வுகளையும் பின்பற்றுகின்றவன் தேவனுக்கு கீழ்ப்படியப் முடியாது. மனசாட்சி நமக்கு சிறந்த வழிகாட்டியல்ல அப்போஸ்தலன் பவுல் சபையை துன்பப் படுத்தின போது அது அவன் மனசாட்சியின்படி சரியாய் அவனுக்குப்பட்டது. ஆனால், அது சரியல்ல (அப் 23:1) பின்னாளில் அதைப்பற்றி அவர் கூறும்போது முன்னே நானும் நசரேனாகிய இயேசுவின் நாமத்திற்கு விரோதமாய் அநேக காரியங்களை நடப்பிக்க வேண்டுமென்று நினைத்திருந்தேன் (அப் 26:9) என்கிறார்.

கீழ்ப்படியாமைக்கான காரணங்களில் மற்றுமொன்று இந்த உலகத்தின் மேல் நாம் வைக்கும் அன்பு. லோத்தின் மனைவி பின்னிட்டுப் பார்த்தாள், காரணம் அவள் இருதயம் இன்னும் சோதோமில் இருந்தது. இருதயம் பின்நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்க கிறிஸ்துவுடன் கூட முன்னேறிச் செல்வதென் பது இயலாத காரியம். பொக்கிஷம் எங்கேயோ அங்குதான் இருதயம் இருக்கும். உங்கள் பொக்கிஷம் எது? இருதயம் எங்கு இருக்கிறது? (ஆதி.2:21-24).

இன்னுமாக பார்த்தால், குருடரான வழிகாட்டிகளை பின்பற்றுவதும் ஒருவகை. இதுவும் நாம் தேவனுக்கு கீழ்படியாமல் போகச் செய்து வழிகாட்டியும், பின்பற்று கிறவரும் சேர்ந்து குழியில் விழ வேண்டி வருகிறது (மத் 15:14).

கோழைத்தனம் என்ற ஒருவகை இதுவும் தேவனுடைய வார்த்தைக்கு நம்மை கீழ்படியச் செய்யாமல் விட்டு விடுகிறது. மனிதர்கள், உறவுகள், நண்பர்கள் இவர்களுக்கு பயந்து உண்மை சத்தியத்திற்கு செவிசாய்க்காமல் அவர்களை பிரியப்படுத்த சத்தியத்தோடு சமரசம் செய்ய வைத்து விடுகிறது, இந்த கோழைத்தனத்திற்கு பிலாத்து ஒரு சிறந்த உதாரனம் கூட்டத்துடன் ஒத்துப்போய் அவர்களை சமாளிக்க தன் அதிகாரத்தை பயன்படுத்தத் தவறி இயேசுவை சிலுவையில் அறையச் சம்மதித்து விட்டான். இயேசுவினிட தில் ஒரு குற்றத்தையும்

காணவில்லை என்று அறிந்தும் அதை உறுதியாயக் வெளியே சொல்லத் துணிவு இல்லை.

அடுத்து, காலம் தாழ்த்துவது இதுவும் கீழ்படியாமைக்குக் காரணமாகிவிடுகிறது. தேவன் எதை செய்யச் சொல்லுகிறாரோ அது அநேகருக்குத் தெரியும் ஆனால், அதைச் செய்ய மாட்டார்கள். ஏனென்றால் சாத்தான் சொல்லும் நாளைக்கு கீழ்ப் படிந்துவிட்டு தேவனின் இன்றைக்கே, கவனிக்க மறுத்துவிடுகின்றனர். எபிரேய ஆசிரியர் கூறுகிறபடி ஆகையால், பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறபடியே இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், வனாந்தரத்தில் கோப மூட்டின போதும், சோதனை நாளிலும் நடந்தது போல், உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள் [எபி: 3:7,8] என்று வாசிக்கிறோம்.

உண்மைச் சத்தியமானது இன்றைக்கு புதிய ஏற்பாட்டு உபதேசம். தேவன் நம்மேல் வைத்த அந்த அளவில்லா அன்பினிமித்தம் தன் ஒரே பேரான குமாரனை உலகிற்கு கொடுத்து, அவரை சிலுவையில் மரிக்கச் செய்து மீண்டும் மூன்றாம் நாளில் உயிரோடு எழும்படி செய்து, அவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பை கொடுத்து, மனிதன் அந்த இரத்தத்தோடு தொடர்பு கொள்ள ஞானஸ்நானம் என்ற அரிய வாய்ப்பை கொடுத்து அதற்கெல்லாம் நம்மைக் கீழ்படியச் சொன்னால், நம் பெருமை, பாரம்பரியம், கடின இருதயம், வழக்கங்கள் அசட்டை செய்கிறவர் களாகவே இன்றளவும் மனுக்குலம் இருக்கிறது. பிதாவின் சித்தத்திற்கு அருமையானவர்களே சிந்திப்போம், கீழ்ப்படிவோம் பரம கானானை சுதந்தரிப்போம் ஆமென்.

# வாழ்க்கையின் அர்த்தத்தைத் தேடி...

சகோ. பென்னி மார்ட்டீன்

இயேசு கிறிஸ்துவின் நல் நாமத்தில் வாழ்த்துதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் யாவரையும் இக்கட்டுரையின் வாயிலாக மறுபடியும் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். மனிதர்களாகிய நாம் இப்பூமியில் வாழும் வாழ்க்கையின் அர்த்தத்தைக் கண்டுபிடிக்க பல நூற்றாண்டுகளாக முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், நமக்கு முன்பு வாழ்ந்த மனிதன் எண்ணற்ற காரியங்களைக் கண்டுபிடித்திருக்கிறான். நாம் வாழ்கின்ற உலகம் விஞ்ஞான உலகம். நாம் சற்றும் கற்பனை செய்து பார்க்க முடியாதவைகளை எல்லாம் மனிதன் கண்டுபிடித்திருக்கிறான். ஆனால், வாழ்க்கையின் அர்த்தத்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் தோல்வியையே தழுவியிருக்கிறான்.

குரங்கிலிருந்து மனிதன் வந்தான் என்கிற டார்வின் கொள்கையையெல்லாம் நம்மால் நம்ப முடியாது. இவ்வுலகில் வாழ்ந்த அநேக தத்துவ ஞானிகள் வாழ்க்கையில் அர்த்தம் பற்றி தத்துவங்களை உதிர்த்திருக்கிறார்கள். ஆனால், வாழ்க்கையின் அர்த்தத்தை சாலொமோன் ஞானியைப்போல எந்த ஒரு மனிதனாலும் கண்டறிந்து கூறியிருக்க முடியாது. இஸ்ரவேலின் சிங்காசனம் அதன் முழுவல்லமையிலும், கம்பீரத்திலும் இருக்கும் போது சாலோமோன் அரியணையில் அமர்ந்தார். சலொமோனுக்கு ஞானம் செல்வம், புகழ் போன்றவைகள் திரளாயிருந்தன. இவைகளின் மத்தியில் சாலொமோன் ராஜா வழ்க்கைகான அர்த்தத்தைத் தேடினார். இது பிரசங்கி புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அவர் இவ்விதமாக எழுதினார். மாயை, மாயை எல்லாம் மாயை ' என்று. சூரியனுக்குக் கீழே மனுஷன் படுகிற எல்லாப் பிரயாசத்தினாலும் அவனுக்குப் பலன் என்ன? ஒரு சந்ததி போகிறது. மறுசந்ததி வருகிறது, பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கிறது (பிரசங்கி 1:2–4)

நான் இந்த உலகத்தை விட்டுப்போன பிறகு எனக்கு என்ன பயன் உண்டாகும்? நான் என்ன வித்தியாசத்தை ஏற்படுத்துவேன்? இது போன்ற கேள்விகள் மனித ஆத்துமாவுக்கு பல நூற்றாண்டுகளாக தொடர்ந்து தொந்தரவு

கொடுத்துக் கொண்டே இருக்கிறது. சாலொமோன் ராஜா உலக சிற்றின்பங்களினால் வாழ்க்கையின் அர்த்தத்தைத் தேடினார். அவருடைய கண்டுபிடிப்புகள் எல்லாம் முக்கியத்துவம் வாய்ந்தவை. ஏனென்றால், அவர் மட்டுமே உலகத்தின் சிற்றின்பங்கள் எல்லாவற்றிலும் சிறந்தவைகளை முழுமையாக அனுபவித்தார். இந்த உலகில் எந்த ஒரு மனிதனும் அவரைப்போல எல்லாவற்றையும் விரும்பிய வண்ணம் அனுபவித்ததில்லை. எனவே, அவர் வாழ்க்கையின் அர்த்தத்தை எந்தெந்த கோணங்களில் தேடியிருந்தார் என்பதை அலசிப்பார்த்து நாமும் வாழ்க்கையின் அர்த்தம் என்ன என்பதைக் கண்டு கொள்வோம்.

**I சாலொமோன் வாழ்க்கையின் அர்த்தத்தை ஞானத்தில் தேடினார்**

I இராஜாக்கள் மூன்றாம் அதிகாரத்தில் சாலொமோன் ஞானத்தைப் பெற்றுக்கொளவதற்கு எந்த முயற்சியையும் எடுக்க வேண்டியதில்லை. மாறாக , தேவனிடம் அதைக் கேட்டார். தேவன் அதை அவனுக்கு ஈவாகக் கொடுத்தார். ஆனால், தேவனால் கொடுக்கப்பட்ட ஞானமாக இருந்தாலும் கூட தேவனுக்கு சேவை செய்ய அது பயன்படாவிட்டால் வாழ்க்கைக்கான அர்த்தத்திற்கு விடை காண முடியாது என்று சாலொமோன் சுருக்கமாக சொல்கிறார். அதாவது, உலக கல்வியில் மட்டும் விடை காண முடியாது என்று சாலொமோன் சுருக்கமாக சொல்கிறார். அதிக ஞானத்தினாலே அதிக சலிப்புண்டு அறிவு பெருத்தவன், நோவு பெருத்தவன் (பிரசங்கி 1:18) கல்வி வாழ்க்கையின் ஒரு பகுதியே தவிர அதுவே வாழ்க்கையல்ல. வெறும் கல்வி வாழ்க்கையில் அர்த்தத்தை கண்டறிய உதவி செய்யாது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

**II சாலொமோன் வாழ்க்கையின் அர்த்தத்தை செல்வத்தில் தேடினார்**

சாலொமோன் ராஜா செல்வச் செழிப்பாக வாழ்ந்தார். அவர் தன் அரண்மனை முழுவதையும் கட்டி முடிக்கப் பதிமூன்று வருடம் சென்றது. அந்த அரண்மனையின் ஆடம்பரத் தோற்றத்தப் பற்றி I இராஜாக்கள் ஏழாம் அதிகாரத்தில் நாம் வாசிக்க முடிகின்றது. இன்றைய அம்பானி மற்றும் பில்கேட்ஸின் மாளிகைகளைவிட ஆடம்பரமானது என்பதை நாம் புரிந்து கொள்ள முடிவது மட்டுமல்ல பூமியின் சகல ராஜக்களைப் பார்க்கிலும் ராஜாவாகிய சாலொமோன் ஐசுவரியத்திலும், ஞானத்திலும் சிறந்தவனாயிருந்தான் என்று தேவவசனம் சொல்கிறது (II ராஜாக்கள் 10:23) செல்வத்தின் வாயிலாக வாழ்க்கையின் அர்த்தத்தை கண்டறிய முற்பட்ட சாலொமோன் சொன்ன வார்த்தைகளை கவனியுங்கள்.

பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடையவில்லை' இதுவும் மாயையே. பொருள் பெருகினால் அதை தின்கிறவர்களும் பெருகுகிறார்கள். அதை உடையவர்கள் தங்கள் கண்களினால் அதைக் காண்பதேயன்றி அவர்களுக்கு பிரயோஜனம் என்ன? (பிரசங்க்கி 5:10,11).

### III சாலொமோன் வாழ்க்கையின் அர்த்தத்தை பெயரிலும், புகழிலும் தேடினார்

சில மக்கள் இந்த உலகத்தில் வாழும்போது பெரும் புகழ் பெற்றால் மட்டுமே தாங்கள் முழுமையடைவதாக கருதுகிறார்கள். அதைவிட மகிழ்ச்சி வேறு எதுவுமில்லை என்று சொல்கிறார்கள்.

அப்படிப் பார்த்தால் சாலொமோன் ராஜா இஸ்ரவேல் தேசத்தை ஆட்சி செய்த நாட்கள் மிகச் செழிப்பான நாட்கள், அந்நாட்களில் அவர் புகழின் உச்சியில் இருந்தார். அவருடைய பேரும், புகழும் உலகெங்கிலும் பரவியது. அவருடைய இராணுவச் செலவினங்கள் அபரிதமானது. சாலொமோனிடத்தில் ஆயிரத்து நானூறு இரதங்கள் இருந்தது. பன்னீராயிரம் குதிரை வீரரும் இருந்தார்கள். அங்கே பிரச்சனை என்னவென்றால், அவரோடு போர் செய்ய யாருமில்லை. எல்லா தேசங்களும் அவரை மதித்து அவருக்கு மரியாதை கொடுத்தன. அவரிடம் கப்பம் செலுத்தப்பட்டது (ராஜாக்கள் 10:22 26). சேபாவின் ராணி சாலொமோனின் கீர்த்தியைக் கேள்விப்பட்டு அவரை சந்தித்திருக்கிறாள் (ராஜாக்கள் 10:19).

அவருக்கு கிடைத்த பணத்திலும், புகழிலும் அவர் திருப்தியடையவில்லை. அவர் வெறுமையானவராகவே உணர்ந்து வாழ்க்கையின் அர்த்தத்தை தேடிக்கொண்டிருந்தார். வாழ்க்கையையே வெறுத்தாவராய் அவர் சொல்லும் வார்த்தைகளைக் கவனியுங்கள் ஆகையால், இந்த ஜீவனை வெறுத்தேன், சூரியனுக்கு கீழே நான் பட்டபிரயாசத்தையெல்லாம் வெறுத்தேன். இதுவும் மாயையே' என்று சொல்கிறார் (பிரசங்கி 2:1523).

கடைசியாக, சாலொமோன் வாழ்க்கையின் அர்த்தத்தைத் தேடுவதில் விடை கண்டுவிட்டார். அந்த விடையை அவருடைய வார்த்தைகளாலேயே கேட்போம் 'காரியத்தின் கடைத்தொகையை கேட்போமாக, தேவனுக்குப் பயந்து அவர் கர்பனைகளைக் கைகொள்; எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே' (பிரசங்கி 12:13). எனவே, வாலிபச் செலவங்களே, நாம் இவ்வுலகில் வாழ்வதற்கான நோக்கமே தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கொள்வதற்காகத் தான் என்பதை புரிந்து கொண்டோம் அல்லவா, அப்படிச் செய்யும்போது நம் வாழ்க்கைக்கு ஓர் அர்த்தம் இருக்கும். ★

சிறுவர் பகுதி

# பேதுருவிடமிருந்து....

Bro. ஏபில் நாயகம்

பிரியமான தம்பி, தங்கைகளே! இயேசுவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துக்கள். அனைவரும் சுகமாக இருக்கிறீர்களா? மீண்டும் இந்த மாதம் உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். சரி, பாடத்திற்கு செல்லாமா?

மத்தேயு 14:13-21 ல், இயேசுவை திரளான ஜனம் பின்தொடர்ந்தார்கள் என்று வாசிக்கிறோம். இயேசு அவர்மீது மனதுருகினார். அநேகரை வியாதியிலிருந்து குணமாக்கினார். அவர்களுடைய பசியை வெறும் ஐந்து அப்பம், இரண்டு மீனைக்கொண்டு ஆற்றினார். இவையெல்லாம் நடந்து முடிந்த பின், இயேசு ஜனங்களை அனுப்பிவிட்டு, தம்முடைய சீஷர்களை தமக்கு முன்னே அக்கரைக்கு போகும்படி துரிதப்படுத்தினார். இயேசுவோ தனித்து ஜெபம் பண்ண ஒரு மலையின்மேல் ஏறினார்.

சீஷர்கள் சென்ற படகு நடுக்கடலை சேர்ந்து, எதிர்க்காற்றாய் இருந்தபடியால் அலைகளினால் அலைவுபட்டது. சீஷர்கள் சிரமப்படுகிறதைப் பார்த்த இயேசு நாலாம் ஜாமத்தில், கடலின் மீது நடந்து தத்தளித்துக் கொண்டிருந்த படகுக்கு வந்தார். வந்திருக்கிறவர் இயேசு என்பதை அறியாத அவர்கள், கலக்கமடைந்து ஆவேசம் என்று பயத்தில் அலறினார்கள். உடனே இயேசு அவர்களோடே பேசி, திடன் கொள்ளுங்கள், நான் தான், பயப்படாதிருங்கள் என்றார்.

சீஷனாகிய பேதுரு இயேசுவை நோக்கி: ஆண்டவரே! நீரேயானால் நான் ஜலத்தின் மேல் நடந்து உம்மிடத்தில் வர கட்டளையிடும் என்றார்.அதற்கு இயேசு வா என்றார். அப்பொழுது பேதுரு படகை விட்டிறங்கி, ஜலத்தின் மேல் நடந்தான். அந்நேரத்தில் காற்று பலமாய் அடித்தபடியால் அவன் பயந்து நீரில் அமிழ்ந்து போனான். ஆண்டவரே என்னை இரட்சியும் என்று இயேசுவை நோக்கி கூப்பிட்டான்.

அப்பொழுது இயேசு கையை நீட்டி அவளைப் பிடித்து, அற்பவிசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய் என்று கேட்டார். அவர்கள் படகில் ஏறின உடனே காற்று அமர்ந்தது. இந்த சம்பவத்திலிருந்து, நாம் கற்றுக்கொள்ள மூன்று பாடங்கள் உள்ளது. கிறிஸ்துவை பின்பற்ற நினைக்கும் நமக்கு பிரயோஜனமான பாடங்கள்.

## 1. விசுவாசம் மிகவும் அவசியம்:

இயேசு என்ன சொன்னாரோ அதை அவர் நிச்சயம் செய்வார் என்று நம்புவது தான் விசுவாசம். எபிரேயர். 11:6–ல் 'விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாக இருப்பது கூடாத காரியம்' என்று வாசிக்கிறோம். எனவே 'விசுவாசம்' இல்லாமல் நாம் தேவனுடைய வழி நடத்துதலை பெற்றுக் கொள்ள முடியாது.

## 2. சந்தேகமில்லாத விசுவாசம்:

பேதுரு நீரில் மூழ்கின போது, இயேசு அவனைப் பார்த்து 'அற்ப விசுவாசியே' என்று கூறினார். விசுவாசம் முழுமையாக இல்லாமல், சந்தேகத்தோடு இருந்ததே பேதுரு நீரில் மூழ்கக் காரணமாயிற்று. தேவன் நமக்கு கொடுத்திருக்கிற வாக்குத்தத்தங்கள் மீது நம் விசுவாசம் கட்டப்படவேண்டும். அப்படிக் கட்டப்படுகிற விசுவாசம் சந்தேகமில்லாத விசுவாசமாக இருக்க வேண்டும்.

## 3. சீஷேகள் தத்தளித்தபோது இயேசு வந்தார்:

பெருங்காற்றினால் சீஷர்கள் கஷ்டப்படுவதை பார்த்த இயேசுவானவர் அங்கே அவர்கள் நடுவில் வந்தார். நீரில் அமிழ்ந்து போன பேதுருவை கரம் நீட்டி தூக்கினார். இது நமக்கு மிகவும் உற்சாகம் தரக்கூடிய ஒரு பாடம். நாம் ஒருவேளை நம் விசுவாசக் குறைவால் கஷ்டப்படும் போது பிதாவும் நமக்கு உதவுவார். எனவே, நாம் பயப்பட தேவையில்லை.

எனவே அன்பு குழந்தைகளே! நீங்கள் ஒன்றைக் குறித்தும் கவலைப்படத் தேவையில்லை. தேவன் மீது விசுவாசமாயிருங்கள். நிச்சயம் அது உங்களுக்கு மிகுந்த ஆசீர்வாதத்தை கொண்டுவரும் கருத்தரங்கில் சந்திப்போம். ★

# யார் சீஷன்?

Bro. பாண்டியன்

குரு, சிஷ்யன் என்ற வார்த்தை நமக்குத்தெரியும். தனக்குத் தெரிந்த கலையைக் கற்றுத்தர தெரிவு செய்யப்பட்ட ஒரு சிலருக்கு போதித்து உருவாக்குபவர் குரு என்றும் அவரிடம் கற்றுத் தேறுபவருக்கு சிஷ்யன் அல்லது சீஷன் என்றும் அழைக்கப்படுகிறார். வேதத்தில் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மட்டுமே குருவாக இருக்கிறார் (மத்23:10) என்று வாசிக்கிறோம். இவ்வுலகத்திற்கு ஒரே குரு நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவே. ஆனால், அரசியலில் சிலர் தலைவர்களையும் சினிமாவில் சிலரை ரசிகர்கள் என்றும் பின்பற்றுபவர்களையும், அறிவாளிகள் தத்துவஞானி களையும் பின்பற்றுகிறார்கள். கிறிஸ்தவர்களாகிய நாம் கிறிஸ்துவைப் பின்பற்றுவதால் நாமும் சீஷர்களே. பெண்கள் சீஷி என்றும் அழைக்கப்பட்டுள்ளனர் (அப்9/36).

போதகரின் ஆலோசனைகளையும் கட்டளைகளையும் விருப்பத்தோடே கைக்கொள்பவனே உண்மையான சீஷன். ஆண்டவர் சொல்வதை கவனியுங்கள் – **நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக் கொள்ளுங்கள் [யோவா14:15]** அவருடைய கட்டளைகள் கஷ்டமானதைப் போல் தோன்றினாலும் அது லேசானது என்கிறார் கிறிஸ்து. அதில் முக்கியமானது நான் சாந்தமும் மனத்தாழ்மையும் உள்ளதால் நீங்களும் அதைக் கற்றுக் கொள்ளுங்கள் என்பது. மனுஷனுடய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாது என்று (யாக்1:20) நாம் புரிந்து கொண்டால் பலவிஷயங்களில் நமக்கு டென்ஷன் குறையும். நம் குருவானவர் சாந்தமும், மனத் தாழ்மையும் உள்ளவர் என்பதை ஞாபகப்படுத்தி நாமும் அந்தக் குணாதிசயங்களில் வளரும்போதுதான் அவருக்கு சீஷனாக இருக்க முடியும். தங்களில் யார் கிறிஸ்துவுக்குப் பின் பெரியவர் என்ற வாதம் சீஷர்களுக்குள் வந்தது. அப்போது இயேசுவானவர் அவர்கள் கால்களைக் கழுவி நீங்களும் இவ்விதமாக தாழ்மையை அணிந்து கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார். ஆனால், நம்மில் பலருக்கு இது பெரும் சவாலாக உள்ளது. சீஷன் தேறும்போது தன்குருவைப் போலிருப்பான் என்பதை நினைவில் கொள்.

**நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என்பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராய் இருப்பீர்கள். [ யோவான்15:8]** நீங்கள் உலகத்துக்கு வெளிச்சம், உங்கள் நற்கிரியைக் கண்டு பிறர் தேவனை மகிமைப்படுத்த வேண்டும் என்கிறார் இயேசுவானவர். பேதுருவும் உங்கள் நற்கிரியைகளைப் புறஜாதியார் காணும்படி அவர்களுக்குள்ளே நல்நடக்கையுள்ளவர்களாய் இருங்கள் என்கிறார் [1பேது2:12]. நாம் கனி கொடுக்க தேவ உதவி உண்டு. அவர் விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் அளித்து நீதியின் விளைச்சலை வர்த்திக்கச் செய்கிறார் [2கொரி9:10].

**நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள். [யோவா8:31]** கிறிஸ்துவின் உபதேசம் நம்மை தேவனிடத்தில் விசுவாசமாயிருக்கவும், நம் தேவைகளுக்கு அவரையே நம்பி ஜெபிக்கவும் வலியுறுத்துகிறது. நாளையதினக் கவலைகளுக்கும், பாவங்களுக்கும், பகைமைகளுக்கும் விலகி இருக்கவும் போதிக்கிறது. ஆனால், இந்த விஷயங்களில் நாம் ஆரம்பத்தில் உற்சாகமாயிருந்தாலும், நாளாக ஆக மற்றவர்களைப் பார்த்து நாம் சோர்ந்து போகிறோம். அதினால் **நாம் பிறரை நோக்காமல் கிறிஸ்துவையே கவனித்துப் பாருங்கள்'' என்கிறார் எபிரெய ஆசிரியர் [எபி3:1, 12:1] அது மாத்திரமல்ல, நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக் கொண்டிப்போகில் கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாய் இருப்போம்** [எபி3:6,14] என்றும் பார்கிறோம். கிறிஸ்துவின் காலத்திலேயே சிலர் இது கடினமான உபதேசம் என்று அவரை விட்டு விலகிப் போனார்கள். இன்று நாம் சபையில் நிலைத்திருப்பது நம்முடைய விசுவாசத்தை விட அது தேவனுடைய தயவு'' என்பதே உண்மை [ரோம 11:22].

**நீங்கள் ஒருவரில் ஒருவர் அன்புள்ளவர்களாய் இருந்தால் அதினால் நீங்கள் என் சீஷர் என்று மற்றவர் அறிந்து கொள்பவர்கள் [யோவா13:35].** சபையில் இருப்பவர்கள் ஒரே குடும்பம் என்று அப்போஸ்தலர் உபதேசம் போதிக்கின்றது. அதினால்தான் நம்மிடையே பல்வேறு கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் கிறிஸ்துவினிமித்தம் நாம் ஒற்றுமையாய் இருக்கிறோம். இவ்வாறு சீஷர்கள் ஒருமனதாயிருக்க கிறிஸ்துவும் பிதாவிடம் ஜெபிப்பதை கவனியுங்கள்

(யோவா17:21) அன்புக்கு அடையாளம் என்ன? வாக்குவாதம் செய்யாமல் இருப்பது, வழக்காடுவது குற்றம் என்றும் அநியாயத்தை சகிக்க வேண்டும் என்றும் பவுல் குறிப்படுகிறார் (1கொரி6:7) ஆபிரகாம், லோத்து பிரிந்து சென்றபோது ஆபிரகாம் விட்டுக் கொடுத்தார். விசுவாசிகள் ஆபிரகாம் சந்ததி எனவே நாமும் அப்படி இருக்க வேண்டும். கஷ்டப்பட்டு கிணறுவெட்டியவுடன் அது எங்களுக்கு என்று எதிரிகள் உரிமை கொண்டாடிய போது ஈசாக்கு விட்டுக் கொடுத்தார் (ஆதி26:20) சீஷர் தங்களில் இயேசுவுக்குப் பின் பெரியவர் என்று வாதிட்ட போது இயேசு கால்களை கழுவி மாதிரி காண்பித்தார். சகோதரனிடத்தில் அன்பு கூராதவன் பிசாசினால் உண்டாயிருக்கிறான் (1யோ3:10) தேவனிடம் அன்பு கூறுகிறவர்கள். தேவனுடைய பிள்ளைகளிடமும் அன்பு கூர வேண்டும்.

**கிறிஸ்துவை விட மற்றதை குறைவாக நேசிக்க வேண்டும் அப்போதுதான் நாம் சீஷர்** (லூக்14:26,33)

கிறிஸ்துவைக் காட்டிலும் நெருங்கிய உறவு உலகத்தில் ஒரு சீஷனுக்கு வேறு எதுவுமில்லை! என்னை விட உறவுகளை அதிகமாய் நேசிப்பவன் எனக்குப் பாத்திரன் அல்ல (மத்10:37) எனகிறார் இயேசு. மேலும், தனக்குண்டானவற்றையும் வெறுக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். பவுல் அவ்வாறு நடந்து கொண்டார். (பிலி3:8,11) ஆனால், இரட்சிக்கப்பட்ட பின்பும் மாயவித்தைக்காரன் சீமோன் சுயநலத்தையும், கவுரவத்தையும் நாடினான் (அப்8:19-22). எனவே, அப்போஸ்தலர்கள் இயேசுவானவர் அழைத்த போது எல்லாவற்றையும் விட்டு பின் சென்றார்கள். மோசேயும் தன் சுயமதிப்பை கிறிஸ்துவுக்காக விட்டான் எபி 11:24, 25 நாம் உபத்திரவங்களால் சோராமல் ராஜ்ஜியத்தில் நிலைத்திருப்போம் (அப்14:22).

தேவக்கிருபை நம் அனைவரோடுங்கூட இருப்பதாக ஆமென். ★

# கிறிஸ்து சிருஷ்டிக்கப்பட்டவரா?

Bro. ஆறுமுகம் சென்ற இதழ் தொடர்ச்சி

2. பார்வோனின் தலைப்பிள்ளை முதல் எந்திரம் அரைக்கும் அடிமைப் பெண்ணின் தலைப்பிள்ளை வரைக்கும் எகிப்திலுள்ள முதற்பேறானவை அனைத்தையும் கர்த்தர் அழிப்பதாக சொன்னார் [யாத்திராகமம் 12.29] கர்த்தரை அறியாத ஜனங்களில் முதல் பிறக்கும் பிள்ளைகளை இங்கே குறிப்பிடுவதும் வித்தியாசமான கருத்து.

3. பிந்தி பிறந்த ஈசாக்கே இஸ்ரவேலர்களாகிய முதற் பேறான நாட்டின் தகப்பன் எனப்பட்டார் இஸ்மவேல் அல்ல.

4. இரட்சிக்கப்பட்டு சபையில் இருப்பவர்கள் 'முதற் பேறானவர்களின் சர்வ சங்கம் என்று குறிப்பிட்டு எழுத்தாளர் எழுதுகின்றார் [எபிரேயர் 12:23] முதற்பிறப்பு சிருஷ்டிக்கப் படுதலை குறிக்குமானால், அதில் கிறிஸ்து மட்டுமே முதற் பேறானவர் என்று வசனம் குறிப்பிட்டுக் காட்டாதது ஏன்?

**III நீதிமொழிகள் 8:22.31 ல் இயேசு கிறிஸ்து பேசுகிறாரா?**

வசனம் 22 –ல் ஞானம் தேவனுடைய பூர்வீக வழியின் ஆதியாக (ganah) இருந்ததாக குறிப்பிடுகிறது. அதாவது, தேவனுடைய வழியின் ஆஸ்தியாக ஞானம் இருந்தது என்று எபிரெயர் மொழி சொல்லுகிறது. மேற்குறித்த வசனம் 26 28 ல் 'மலைகள் நிலை பெறுவதற்கு முன்னும், குன்றுகள் உண்டாவதற்கு முன்னும் அவர் பூமியையும் அதன் வெளி களையும் பூமியிலுள்ள மண்ணின் திரள்களையும் உண்டாக்கு முன்னும் நான் ஜபிக்கப்பட்டேன். அவர் வானங்களை படைக் கயில் நான் அங்கே இருந்தேன் ; அவர் சமுத்திரத்தின் விலாசத்தை வட்டணிக்கயிலும், உயரத்தில் மேகங்களை ஸ்தாபித்து, ... பூமியின் அஸ்திபாரத்தை நிலைப்படுத்து கையிலும் நான் அவர் அருகே செல்லப் பிள்ளையா யிருந்தேன்..., என்று சொல்லப்படுகிறது. இது இயேசு பேசுவதுதானா?

இயேசு சிருஷ்டிக்கப்பட்டவரா?

கடந்த பாடத்தில் சிருஷ்டிகளின் முதற் பேறானாவர் கிறிஸ்து என்பது அண்ட சாராசரங்களை தமது குமாரன் மூலமாய் உண்டாக்கின தேவன் அவரையே எல்லா சிருஷ்டிகளுக்கும் தலையாய நபராக வைத்தார் என்றும் பார்த்தோம். மேலும், முதற் பேறானவர் எனும் வார்த்தை

முதலில் பிறந்த அல்லது சிருஷ்டிக்கப்படுதலை குறிப்பதில்லை என்றும், மூன்றாவதாக நீதிமொழியினை 8:1, 22 –31 கிறிஸ்து தாமே பேசுவதாக எடுத்துக்கொள்ளக் கூடாது; ஏனெனில், அது ஞானத்தின் சிறப்பை எழுத்தாளர் விவரிக்கும் ஒருமுறை என்றும் பார்த்தோம்.

iv. ஜநிப்பித்தல் சிருஷ்டிப்பு ஆவது எப்படி?

கொலோசெயர் 1:15 ஐ நீதிமொழிகள் 8:26 உடன் ஒப்பிட்டு ... அவர் பூமியையும் அதன் வெளிகளையும் பூமியிலுள்ள மண்ணின் திரள்களையும் உண்டாக்கு முன்னும் நான் ஜநிக்கப்பட்டேன் என்று சொல்லப்பட்டிருப்பதால் அது கிறிஸ்து சிருஷ்டிக்கப்பட்டிருந்ததையே பேசுகிறது எங்கின்றனர். இயேசு எங்கே, எப்படி யாரிடத்தில் ஜபிக்கப் பட்டார்? ஜபிக்கப்படுதல் பொதுச் சொல்லாகிய பிறப்பித்தலின் ஒரு குறிப்புச் சொல். கிராம வழக்கில் தனது மகனின் சேட்டைகளை பொறுத்துக் கொள்ள இயலாததால் நீ எப்படிடா என் வயிற்றில் ஜெநிச்சே? என்று கேட்பர். வயிற்றில் உருவாகுதல், கர்பந்தரித்தல், ஆகியவற்றையே இது பொருள் படுத்துகிறது. இப்படி கரு உருவாக ஒரு காரணியும் இருக்க. ஈசாக்கு சாராளிடத்தில் கருவானபோது, ஆபிரகாம் சாராள் இருவருமே உடற்கூறுப்படி சாத்தியமற்றவர்களாயிருந்தனர். ஆகிலும் ஈசாக்கின் பிறப்பிற்கு சாராள் ஒரு காரணி யாக்கப்பட்டாள் (ரோமர் 4:18–21) இயேசு மரியாளிடத்தில் கர்பந்தரித்த போது மரியாள் உடற்கூறுப்படி சாத்தியமற்ற (கணவனை அறியாத கன்னியாக) இருந்தாள். பரிசுத்த ஆவியானவர் காரணியானார் (லுக்கா 1:34, 35) பரலோகத்தில் இயேசு இருந்தபோது , அவர் ஜநிக்கப்பட காரணி அவரை சுமந்த தாய் யார்? அவர் ஆரம்பமும் முடிவுமில்லாதவராக, பிதாவாகிய தேவனைப் போன்றே முந்தினவரும் பிந்தினருமாய் இருந்தார் , இருக்கின்றார் (ஒப்பிடுக வெளி 1:8–1:11; எபிரேயர் 1:12; வெளி 22:22,13) எனவே, இயேசு ஜநிக்கப்பட்டது என்பது சிருஷ்டிக்கப்பட்டதல்ல (எபி 11:3).

நீதிமொழிகள் 8:26 ல் பேசும் 'ஜநிக்கப்பட்டேன்' என்பது இயேசுவை குறிப்பதல்ல. ஞானமே தேவனுடைய ஆதியாக (ஆஸ்தி அல்லது மூலகாரணமாக (எபிரேய விளக்கத்தின் ganah என்னும் பதம்) நீதி 8:22 செல்லப்பிள்ளையாக

(நீதி.8:30) களிகூருதலாக (நீதி 3:30,31) இருந்தது. சிருஷ்டிப்பின்போது, ஆதியாகமம் 1:20 ல், **ஜெநிப்பத்தல்** எனும் வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. முழு திரு முறையிலும் 12 முறை இந்த வார்த்தை பயன்படுத்தப் பட்டுள்ளது, ஆதியாகமம் 1:20 ல் தேவன் சமுத்திரத்துக்கு கட்டளையிட்டு, நீந்தும் ஜீவ ஜந்துக்களையும், பூமியின் மேல் வானம் என்கிற ஆகாய விரிவிலே பறக்கும் பறவைகளையும் , ஜலமானது திரளாய் ஜநிப்பிக்கக் (பிறப்பிக்கக்) கடவது என்றார். ஜலம் ஏற்கனவே இருந்தது (ஆதி 1:2,6) ஜலம் தானாய் ஜீவராசிகளை பிறப்பிக்க வில்லை. தேவன் கட்டளையிட்டார். வெளிச்சம் உண்டாகக் கடவதுசு என்பது ஒன்று மில்லாமையிலிருந்து உண்டான சிருஷ்டிப்பு. ஆனால் மனுஷர்கள், பிற சிருஷ்டிகள் பிறப்பிப்பதைப் போல (அல்லது கருத்தரிப்பது போல) ஜலம் அவைகளை ஜநிப்பித்தது. அந்த நீந்தும் ஜீவ ஜந்துக்களும் பறவைகளும் ஜநிப்பிக்கப்பட காரணமாயிருந்தது ஏற்கனவே இருந்த ஜலமே. இவ்வகையில் கிறிஸ்து ஜெபிக்கப்பட என்ன உபகரணம் பயன்படுத்தப்பட்டது? எனவே நீதிமொழிகள் 8:1 ல் பேசப்படும் தேவ ஞானத்தின் சிறப்பம்சம் , கிறிஸ்து சிருஷ்டிக்கப்பட்டார் என்று சொல்ல ஓர் ஆதாரமல்ல.

**IV தேவனுடைய ரூபத்திலும், சாயலிலும் கிறிஸ்து பேசப்படுகிறாரா?**

1. மனுஷன் மட்டுமே தேவனுடைய சாயலிலும் தேவனுடைய ரூபத்தின்படியும் படைக்கப்பட்டான் என்று கூறும் தனித்துவக் கொள்கைக்காரர்கள் கிறிஸ்து மனுஷனாக வந்ததை கொச்சைப்படுத்தி மனுஷனிலிருந்து அவர் வேறுபட்டவரல்ல என்று மறைமுகமாக சொல்லுகின்றனர். அதாவது மனுஷனுக்குக் கொடுக்கப்பட்டிருப்பது பாவ சரீரம் (ரோமர் 6:6) கிறிஸ்துவும் அப்படிப்பட்ட பாவ சரீரத்திலிருந்து தானே வந்தார். இந்த பாவ சரீரம் புறம்பானது அல்லது புறத்தோற்றத்தையுடையது. அது தேவனுடைய ரூபம் , சாயல் என்பது தேவனுடைய உள்ளான தன்மை , என்று தங்கள் மனதில் தோன்றியதை பிதற்றுகின்றனர்.

★ அப்படியானால் மனுஷன் பாவத்துடன் பிறப்பதில்லை எனும் திருமறை போதனை தவறா? (எசேக்கியேல் 18:1–3,20)

★ கிறிஸ்து தமது சரீரத்தில் பாவமில்லாமல் வாழ்ந்தார் என்று எபிரேய எழுத்தாளர் குறிப்பிட்டதும் தவறா? (எ.பி 10:1–5;4:15)

★ தேவன் ஆவியாக இருந்தால் புறத்தோற்றம் எங்கிருந்து வந்தது? (யோவான் 4:24)

★ அவர் ரூபம் புறத்தோற்றத்தக் குறிக்குமானால் அப்போ தேவனே பாவ சரீரத்தில் ரூபத்தையும் உள்ளான தன்மையிலே சாயலையும் வித்தியாசமாகக் கொண்டு மனுஷனுக்கும் இயேசுவுக்கும் சரீரத்தைக் கொடுத்தார் என்று சொல்லுகிறார்களோ?

**2. தேவனுடைய ரூபம் என்ன? சாயல் என்பது என்ன?**

a. ஆதியாகமம் 1:26,27 ல் தேவன் 'நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டக்குவோமாக என்று சொல்லி தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார். ஆதியாகமம் 5:1 ல், 'தேவன் மனுஷனை சிருஷ்டித்த நாளிலே அவனைத் தேவ சாயலாக உண்டாக்கினார்' என்று எழுத்தாளர் உறுதிப்படுத்துகிறார். 5:3 ல், **ஆதாம் நூற்று முப்பது வயதான போது தன் சாயலாக தன் ரூபத்தின்படியே ஒருகுமாரனைப் பெற்று அவனுக்கு சேத் என்று பேரிட்டான்** என்று சொல்லப்படுகிறது இவ்வசனங்களின் அடிப்படையில் ஆதாம் தேவனுடைய சாயலாக உள் தன்மையில் உண்டாக்கப் பட்டு, சரீரம் மண்ணால் உருவாக்கிக் கொடுத்தார். அப்படியானால் தேவன் தமது புறம்பான ரூபத்தின்படி மனுஷனை உண்டாக்கினார் என்பது தேவனும் மண்ணான சரீரத்தையுடையவரா? அதாவது தேவனும் பாவ சரீரத்தை யுடையவரா? கிறிஸ்து அந்த பாவ சரீரத்தை தான் பெற்றாரா? சேத் ஆதாமின் உள்ளான தன்மையில் சாயலையும் , புறம்பான தோற்றத்தில் ஆதாமின் ரூபத்தையும் பெற்றிருந்தான் என்று பொருள். இது சரியென்றால் ஆபேல், காயீன் என்ன சாயலில், என்ன ரூபத்தின்படி பிறந்தனர்। காயீனின் அடுக்கடுக்கான பாவத்துக்கு யார் காரணம்?

b. இயேசு தேவனுடைய ரூபத்தில் (புறத்தோற்றத்தில்?) மட்டுமோ தேவனுடைய சாயலில் (உள்ளன தோற்றத்தில்?) மட்டுமோ (ஏதோ ஒன்றில்) வந்தவரல்ல அல்லது ஒன்றுக் கொன்று வேறுபட்ட நீதியிலிருப்பதைக் குறிப்பது மல்ல . ஏனெனில், கொரித்தியர் 4:4 ல் கிறிஸ்து தேவசாயலாக இருக்கிறார் என்றும் பிலிப்பியர் 2:6 ல் அவர் தேவனுடைய 'ரூபமாயிருந்தார்' என்றும் சொல்லப்படுகிறது. பிலிப்பியர் 2:7ல் அடிமையின் 'ரூபம்' எடுத்து மனுஷசாயலானார்' என்றும் , 2:8ல் இயேசு மனுஷ 'ரூபமாய் காணப்பட்டார் என்றும் சொல்லப்படுகிறது.

இதன் முழுக்காட்சியையும் காணுங்கள்

2 கொரி 4:4 – கிறிஸ்து தேவனுடைய சாயலாயிருக்கிறார்.

பிலிப்பியர் 2:6 கிறிஸ்து தேவனுடைய ரூபமாயிருக்கிறார்.
பிலிப்பியர் 2:7 கிறிஸ்து மனுஷ சாயலானார்.
பிலிப்பியர் 2:8 கிறிஸ்து மனுஷ ரூபமாய் காணப்பட்டார்.

மேலே குறிப்பிடப்பட்ட முந்தின இரண்டும் இயேசு பரலோகத்தில் இருக்கும்போது , தேவனை விட வித்தியாசமான தோற்றத்தில் இருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துகிறது.

பிந்தினதில் [பிலிப் 2:7,8ல்] கிறிஸ்து பூமியிலிருக்கும் போது மனுஷனிடத்திலிருந்து '**இந்த தன்மையில்**' வேறுபட்டிருக்கவில்லை. ஆனாலும், அவருடைய பரலோகத்தின் தெய்வீகத்தன்மையில் எந்த வித மாற்றத்தையோ தாக்கத்தியோ அது ஏற்படுத்தவில்லை.

c. தேவன் ஆவியாக இருக்கிறார் [யோவாப் 4.24] ஆவியாகிய அந்த சரீரத்திற்கு எந்த புறத்தோற்றமும் இல்லை. உபாகமம் 4:12 ல் **அந்த அக்கினியின் நடுவிலிருந்து கர்த்தர் [தேவன்] பேசினார்; வார்த்தைகளின் சத்தத்தை நீங்கள் கேட்டீர்கள்; அந்த சத்தத்தை நீங்கள் கேட்டதேயன்றி ஒரு ரூபத்தையும் காணவில்லை**' என்று மோசே இஸ்ரவேலரிடம் சொன்னார். தேவனுடைய ரூபம் புறத்தோற்றமானால், ஏன் ஜனங்கள் அந்த ரூபத்தைப் பெற்றிருந்தால் பவுலுக்கு தரிசனங் கொடுத்தபோது, இயேசுவின் அந்த சரீரத்திற்கு என்னவாயிற்று?

d. குழப்பவாதிகளான தனித்துவக் கொள்கைக்காரர்கள் சொல்ல வருவது என்னவெனில், இயேசு சிருஷ்டிக்கப்பட்ட தினால் தான் தேவனுடைய புறம்பான சரீரமாகிய ரூபத்தை , பாவ சரீரத்தைப் பெற்றார் என்று வாதிட்டு தங்களை ஞானி களாக்கப் பார்க்கிறார்கள். மேற்குறித்த கேள்விகளுக்கு இவர்களின் பதில் என்ன?

முடிவுரை: 1. இயேசு சிருஷ்டிக்கப்பட்டவரா? இல்லை
2. இயேசு பாவ சரீரத்தைப் பெற்றிருந்தாரா? இல்லை
3. கொலெசெயர் 1:15 இயேசு சிருஷ்டிக்கப்பட்டதற்கு ஆதாரமா? இல்லை

தனித்துவக் கொள்கைக்காரர்கள் மனந்திரும்பட்டும். ஆதாமின் சாயலையும், ரூபத்தையும் கொண்டிருந்த சேத் ஆதாமைப் போலிருந்தால், தேவனுடைய சாயலையும் ரூபத்தையும் பெற்றிருந்த இயேசு மட்டும் மாறுபட்டிருப்பது எப்படி?

இயேசுசிருஷ்டிக்கபட்டவரா?
தொடரும்...

# பிள்ளைகளின் சமாதானம்

Bro. K.M. பிலிப்

பொதுவாக மனித இனத்தில் பிள்ளைகள் பிறப்பது எல்லோருக்கும் மகிழ்ச்சியே. பிள்ளைகளும் வாழ்நாள் முழுவதும் மகிழ்ச்சியாய், சமாதனமாய் வாழ வேண்டும் என்பதே பெற்றோரின் விருப்பமும், வேண்டுதலும், பிரயாசமுமாகும். இதற்காகவே கல்வி, பட்டம், பதவி, பணம் சொத்து, சுகங்களைத் தேடிவைக்கின்றனர். இவைகள் அவசியமே. ஆனாலும், இன்றைய சமுதாய சூழ்நிலையில் சமாதனமான வாழ்க்கை என்பது மிகப்பெரிய கேள்விக் குறியாகவே இருக்கிறது. இதற்காக பெற்றோர் ஆசிரியர் , அரசாங்கம், சமுதாய அமைப்புகள் எடுக்கும் முயற்சி பெரும் பாலும் தோல்வியைத்தான் தழுவுகிறது. புத்தகங்ககள் ஏந்திச் செல்லவேண்டிய பிள்ளைகளின் கைகளில் பட்டாக் கத்தியும் சுத்தியும், இரும்புக்கம்பிகள், கட்டைகள் இடம் பிடித்துள்ளன. ஆசிரியர்களிடத்தில் கைகட்டி பணிவு காட்டவேண்டிய பிள்ளைகள் துணிகரமாய் கைநீட்டி ஆசிரியர்களையே அடிக்கும் அவல நிலையைப் பார்க்கிறோம். ஒழுக்கமும், நற் பண்புகளும், மனித நேயமும் உருவாக வேண்டிய பிள்ளை களின் உள்ளத்தில் எரிச்சலும், பொறாமையும், பகையும் , பழிவாங்கும் உணர்வுகளும் மேலோங்கி நிற்கின்றன. பள்ளிப் பருவத்திலேயே பாலியல் பிரச்சனைகள் தலை தூக்குகின்றன. இப்படி வளரும் பிள்ளைகளிடம் எதிர் கால வாழ்க்கையில் எப்படி சமாதானத்தை எதிர்பாக்க முடியும்? ஆம் , அது கானல் நீராகவே காணப்படுகிறது. அப்படி என்றால் இதற்கு தீர்வுதான் என்ன? எங்கே? எப்படி கிடைக்கும்?

அன்பானவர்களே! நமக்கு பிள்ளைகளை ஈவாக, சுதந்திரமாக, பெலனாகக் கொடுத்த தேவனுடைய ஆலோசனைகளுக்குக் கீழ்படிவது மட்டுமே சரியான தீர்வாக அமையும். ‘ ஆ! என் கற்பனைகளைக் கவனித்தாயானால் நலமாயிருக்கும். அப்பொழுது உன் சமாதானம் நதியைப் போலிருக்கும்‘ என்றும் (ஏசா 48:18)‘ **‘உன் பிள்ளைகளின் சமாதானம் பெரியதாயிருக்கும்** ‘ என்றும் (ஏசா 54:13) வாக்கு மாறாத தேவன் வாக்கு கொடுக்கிறார். இதுவே தீர்வாகும் கோணலும், மாறுபாடுமுள்ள சந்ததியின் நடுவில் வாழும் நம் பிள்ளைகள். குற்றமற்றவர்களாகவும், கடபமற்றவர்களாகவும் மாசற்ற பிள்ளைகளாய் வாழ்ந்து, சமாதான வாழ்க்கை

வாழ்வதென்பது நமக்கு மாபெரும் சவால் என்பதில் சந்தேகமில்லை. அதே சமயம் ' உலகத்தை ஜெயித்த இயேசு நம்மோடிருக்கிறார்; ஜீவனும் வல்லமையும் உள்ள தேவனுடைய வார்த்தை நம் கையில் இருக்கிறது; என்ற உறுதியான விசுவாசத்தோடு சவாலை சந்திப்போம். நம் பிள்ளைகளின் சமாதானம் பெருக தேவனுடைய மூன்று ஆலோசனைகளை பெற்று நடைமுறைப்படுத்துவோம்.
1. போதி 2. நடத்து 3. நட

1. போதி: ஏசா 54:13 ன் பின் பகுதியில் **உன் பிள்ளைகளின் சமாதானம் பெரிதாயிருக்கும்** என்று ஆசிர்வதித்த தேவன், அதைப் பெற்றுக் கொள்ள வசனத்தின் முன்பகுதியில் உன் பிள்ளைகள் எல்லோரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப் பார்கள் என்ற வழியை தெளிவுபடுத்தியிருக்கிறார். ஆம் இதைத்தான் தன் ஜனமாகிய இஸ்ரவேலர்களுக்குக் கட்டளையாகக் கொடுத்தார். உபாகமம் 6:67 ல் **நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகளை, நீ உன் பிள்ளை களுக்குத் கருத்தாய் போதிக்கவேண்டும் என்ற மாபெரும் பொறுப்பை பெற்றோர்களுக்குக் கொடுத்தார். போகிற போக்கில் சொல்வதல்ல; கருத்தாய்; பிள்ளைகளின் சிந்தையை ஆட்கொள்ளும் அளவில் போதிக்கவேண்டும் ஆம்! பிள்ளைகளுக்கு முதல் ஆசிரியர்கள் பெற்றோர்கள்தான். ஆபிரகாமின் பிள்ளை ஈசாக்கு** விதைதான் நூறத்தனையாய் அறுத்தான் 100 % வெற்றியின் வாழ்க்கை வாழ்ந்தான் அவன் ஐசுவரியனாகி, வர வர விருத்தியடைந்தான் (ஆதி 26:12,13) இப்படிப்பட்ட சமாதானமான செழிப்பான வாழ்க்கைக்கு காரணம், தகப்பன் **ஆபிரகாம், பிள்ளை ஈசாக்குக்கு நீதியையும், நியாயத்தையும் செய்து கர்த்தருடைய வழியை காத்து நடவுங்கள் என்று** கட்டளையிட்டதேயாகும் (ஆதி 18:19). ஆம் பிள்ளைகளிடம் கற்கும் திறன் அதிகமுண்டு. இதில் நன்மைகளை மட்டுமே கற்றுக்கொள்ள பிள்ளைகளுக்கு போதிப்பது பெற்றோர்களின் கடமையாகும். உமது கட்டளைகளால் உணர்வடைந்தேன். ஆதலால் எல்லா பொய் வழிகளையும் வெறுக்கிறேன் (119:104) என்ற உறுதியான மனநிலையை பிள்ளைகளிடம் உருவாக்கும் அளவில் கருத்தாய் போதிக்க வேண்டும். வாலிபன் தீமோத்தேயுவை , விசுவாசத்தில் உத்தமகுமாரன் (I தீ 1:2) மாயமற்ற விசுவாசி (II தீ 1:4) சகோதரராலே நற்காட்சிபெற்றவன் என்று (அப் 16:2) வேதம்

வேதம் பெருமைப் படுத்தக்காரணம் அவன் பாட்டியும், தாயும் வேத வசனத்தை சிறுவயதில் இருந்தே கருத்தாய் போதித்ததே யாகும். பாட்டியும், தாயும் வேத வசனத்தை சிறுவயதில் இருந்தே கருத்தாய் போதிப்பதேயாகும்.

பிரியமானவர்களே! உலகம் நமது பிள்ளைகளின் கருத்தையும், கவனத்தையும் இழுத்து மனதை அபகரிக்க வகைதேடிச் சுற்றித்திரிகிறது. இவற்றில் சிக்கிச் சீரழியாமல், சீரான சமாதானமான வாழ்க்கை வாழ தேவ ஆலோசனைகள் போதிக்கப்பட வேண்டும்.

தேவனுடைய வழி உத்தமமானது; கர்த்தருடைய வேதம் பேதையை ஞானியாக்குகிறது; கண்களைத் தெளிவாக்குகிறது. அவைகளைக் கைக் கொள்ளுகிறதினால் மிகுந்த பலனுண்டு; தேவன் அருளிய வேதம் அவர் இருதயத்தில் இருக்கிறது; அவன் நடைகளில் ஒன்றும் பிசகுவதில்லை (சங் 19,37:31) **வேதம் நடக்கும்போது வழிகாட்டும், படுக்கும்போது பாதுகாக்கும்; விழிக்கும்போது உன்னோடு பேசும்** (நீதி :22)

மாற்கு 6:3243 ல் ஒரு சிறுவனும் இயேசுவால் போதிக்கப் பட்டான். தேவை ஒன்று வந்த பொழுது அவனில் சுயம் ஒழிந்து பொதுநலம் மனிதநேயம் ஓங்கிற்று. தன்னிடம் உள்ளதை (5 அப்பம்+ 2 மீன்கள்) உள்ளபடியே கொடுத்தான். **அதன் பலன் எல்லோரும் (5000 பேருக்கும் அதிக மானவர்கள்) திருப்தியடைந்தார்கள் இயேசுவின் போதனை சிறுவனிடம், பிறரிடம் அன்பு செலுத்தும் உயர் பண்பை உருவாக்கிற்று** தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையுள்ளதாயும் இருதயத்தின் நினைவுகளையும், யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது (எபி 4:12) வேதத்தைப் போதிப்பதில், போதுமான திட்டமிட்டு செயல்படுவோம். நம் பிள்ளைகள் வேதத்தை வாசிக்க நேசிக்க போதிப்போம்; அவர்கள் வாழ்க்கையில் திருப்தியும் சமாதானமும் பெரிதாயிருக்கும்.

**உம்முடைய வேதத்தை நேசிக்கிறவகளுக்கு மிகுந்த சமாதானமுண்டு. அவர்களுக்கு இடறில்லை** (சங் 119:165) ஆமேன்.

2. நடத்து 3. நடந்துகாட்டு...

தொடரும்